சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **128/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | முருகன் |
| தந்தை பெயர் | : | ராஜேந்திரன் |
| கிராமம் | : | ஒரத்தநாடு |
| தாலுக்கா | : | ஒரத்தநாடு |
| தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| வயது | : | 40 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

10 மற்றும் 11 எதிரிகளுக்கு எதிராக பிடிக்கட்டளை நிலுவையில் இருந்து வருகிறது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். ( இந்த வழக்கின் தாய் வழக்கான SSC No. 42/2025 என்ற வழக்கில் சாட்சி விசாரணை செய்யப்பட்டதை தொடர்ந்து குற்றவியல் நடைமுறை விதிகளில் உள்ள விதி 32 (3) மற்றும் 32 (5) ன்படி இந்த வழக்கிலும் சாட்சிகள் விசாரணை மேற்கொள்ளபடுகிறது.)

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது நீடாமங்கலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது, கடந்த 12.10.2021ம் தேதியன்று மன்னார்குடி அரசு மருத்தவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையிலிருந்த ராஜாராமன் மனைவி அ.சா.1 ராதிகா என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்றேன். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 1515/2021 ச/பி. 147, 448, 451, 323, 427, 506 (ii) of IPC r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து தஞ்சாவூர் முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளின் பார்வைக்கும், நிலைய கோப்பிற்கும் வைத்தேன். என்னை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான், 12.10.2021ம் தேதி 19.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன் என்றால் சரிதான். மன்னார்குடியிலிருந்து மூவாநல்லூர் கிராமத்திற்கு 20 நிமிடத்திற்குள் சென்றுவிடலாம் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு 10 நிமிடத்திற்குள் சென்று விடலாம் என்றால் சரிதான். பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை 14.10.2021ம் தேதியன்றுதான் தஞ்சாவூர் முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது

என்றால் சரிதான். வெள்ளை பேப்பரில் அ.சா.1 யிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டும், வாக்குமூலத்தை நானே எழுதிக்கொண்டும், உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சரிவர விசாரணை செய்யாமல் 1 முதல் 12 எதிரிகளின் பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.07 16:04:41 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.